*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2024** **06 பிப்ரவரி, 2025**

## <u>பத்திரிகை செய்தி</u>

அரும்பார்த்தப்புரம் ப்ளூ ஸ்டார் மேல்நிலைப் பள்ளியின் மாணிக்க விழா இன்று (06-02-2025) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K.கைலாஷ்நாதன் குத்துவிளக்கு ஏற்றி விழாவினை தொடங்கி வைத்தார்.

சட்டமன்ற உறுப்பினர் திரு சிவசங்கரன், பள்ளியின் தாளாளர் திரு மெய்வழி ராஜ்குமார், பள்ளி முதல்வர் திரு வரலட்சுமி ராஜ்குமார், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் விழாவில் கலந்து கொண்டனர். விழாவில், விளையாட்டு, கலை, கல்வி துறைகளில் முதலிடம் பிடித்த மாணவர்களுக்கு துணைநிலை ஆளுநர் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி சிறப்பித்தார்.

விழாவில் துணைநிலை ஆளுநர் ஆற்றிய உரை..

இந்த மாநிலத்தின் Lt. Governor ஆக தினம் தினமும் பல இடங்களுக்கு போகிறேன். அரசியல் தலைவர்கள், அதிகாரிகள், அறிஞர்கள் பொது மக்கள் என்று பலரை சந்திக்கிறேன். ஆனால்- மாணவர்களை, இளைஞர்களை சந்திக்கும்போது, அது என்னை உற்சாகம் அடைய வைக்கிறது. அவர்களுடைய அறிவு, முயற்சி, சிந்தனை, தேடல் எல்லாம் என்னை பெருமை பட வைக்கிறது. அந்த அனுபவத்தையும் உற்சாகத்தையும் மாணவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். அதற்காகவே, இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறேன்.

பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் வழிகாட்டலில் ”வளர்ச்சி அடைந்த பாரதம் 2047” (VIKSIT BHARAT @2047), அதாவது இந்தியா சுதந்திரம் அடைந்த நூறாவது ஆண்டில் வளர்ச்சி அடைந்த இந்தியாவாக இருக்க வேண்டும் என்ற மாபெரும் இலக்கோடு நம் பயணம் செய்து கொண்டு இருக்கிறோம். இந்த உன்னதமான இயக்கத்தின் உயிர் நாடியாக, ஆதார சக்தியாக இருப்பவர்கள் மாணவர்கள். மாணவர்களின் அறிவும், திறமையும், உழைப்பும், லட்சியமும் தான் இந்தியாவை உலக அரங்கில் ஒரு வளர்ந்த நாடாக உருவாக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அதனால்தான், பாரதப் பிரதமரும் தேசிய அளவில் மாணவர்களோடு உரையாடுவதை நாம் அடிக்கடி செய்திகளில், TVயில் பார்க்கிறோம். இந்த உலகத்தையே வழி நடத்தும் மாபெரும் சக்தியாக, பாரதத்தை உருவாக்கும் பொறுப்பு மாணவர்களுக்கு தரப்பட்டு இருக்கிறது.

ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். 2047 ஆம் ஆண்டில் இங்கே மேடையில் அமர்ந்து இருக்கும் நாங்கள் உயிருடன் இல்லாமல் கூட போகலாம். ஆனால் எங்களுக்கு முன்னே உட்கார்ந்திருக்கும் மாணவர்களாகிய நீங்கள் அப்போது இந்த நாட்டை வழிநடத்தப் போகிறீர்கள்.

மாணவர்களும் இளைஞர்களும் தான் நாளைய இந்தியாவின் விடிவெள்ளிகள். அறிஞராக, விஞ்ஞானியாக, அறிவியல் மேதையாக, விளையாட்டு வீரராக, ஆசிரியராக, அரசியல் தலைவராக இந்த நாட்டையும் உலகத்தையும் வழிநடத்த போகிறவர்கள். மாணவர்களின் சக்தி என்பது அப்படி ஒரு மாபெரும் சக்தி.

அதற்காக நீங்கள் இப்போது இருந்தே உங்களைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும். உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். திறமை என்பது வெறும் பள்ளிப் படிப்போடு முடிந்து போவது இல்லை. அதையும் தாண்டி நம்முடைய

வாழ்க்கையின் எல்லா தளத்திலும் வளர வேண்டும். பள்ளிப் படிப்பை மட்டும் சார்ந்து இருக்காமல் விளையாட்டு, கலை, அறிவியல், யோகா, சமூக அறிவியல் என்று எல்லாவற்றிலும் உங்களுடைய அறிவுத் தேடலை விரிவு படுத்திக் கொள்ள வேண்டும்.

விவேகானந்தர் சொல்லுவார். இந்த மண்ணில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் ஒரு திறமையோடுதான் பிறக்கிறது என்று. அப்படி உங்களுக்குள் இருக்கும் திறமையை அடையாளம் கண்டு அதை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இதை நோக்கி தான் நம்முடைய புதிய கல்விக் கொள்கை (NEP-2020) உருவாக்கப்பட்டு இருக்கிறது. மாணவர்கள் வகுப்பு அறையில் இருந்து உலக அரங்கிற்கு உயர வேண்டும் என்பது தான் அதன் அடிப்படை நோக்கம். தாய் மொழி வழி கல்விக்கு முக்கியத்துவம் தந்து மாணவர்களின் சிந்தனைத் திறனை வளர்த்து அவர்கள் வாழ்வியல் தேவைகளை, சவால்களை சந்திக்க அவர்களை தயார் படுத்துவது தான் அதன் இலக்கு. **(தாய் மொழியில் கல்வி கற்கும் போது நம்முடைய சிந்தனைத் திறன் பல மடங்கு வளர்கிறது)**

இன்று நாம் அறிவியல், தொழில்நுட்பம் சார்ந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். COMPUTER, ARTIFICIAL INTELLIGENCE, DATA SCIENCE என்று தொழில்நுட்பம் விரிவடைந்து கொண்டே போகிறது. இந்த சூழ்நிலையில், இவற்றைப் பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்களுடைய தேடலுக்கு எல்லை இல்லை. இந்த உலகமே GLOBAL VILLAGE என்று சொல்லும் அளவுக்கு நம் கைப்பிடிக்குள் வந்திருக்கிறது. அறிவியல் கண்டுபிடிப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சியை நாம் தெரிந்து கொள்ளும் போது நம்முடைய அறிவியல் அறிவு வளர்கிறது. அதோடு நம்முடைய முன்னேற்றத்தை நாம் வேகப்படுத்த முடியும்.

இன்றைய அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி நம்முடைய வளர்ச்சிக்கு சாதகமாக இருந்தாலும், சில நேரங்களில் கவலை கொள்ள வைக்கிறது. இன்றைய மாணவர்கள், இளம் தலைமுறை பெரும்பாலும் MOBILE PHONEஇல் நேரத்தை வீணடித்துக் கொண்டு இருப்பதை நாம் பார்க்கிறோம். உங்களுடைய நேரத்தை அதில் தொலைத்துக் கொண்டு இருக்கிறீர்கள். அதிலிருந்து நீங்கள் வெளியே வர வேண்டும். சக மாணவர்களோடு, ஆசிரியர்களோடு, பெற்றோரோடு, கலந்து பேசுங்கள். அவர்களுடைய அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ளுங்கள். அதற்கு ஆசிரியர்களும் பெற்றோரும் அவர்களை வழி நடத்த வேண்டும்.

மாணவர்களின் முன்னேற்றம் என்று சொல்லும் போது அதில் பெரும் பங்கு ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் உண்டு என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இளம் தலைமுறையை, மாணவர்களை வழி நடத்தும் பொறுப்பும் கடமையும் அவர்களுக்கு உண்டு.

ஆசிரியர்கள் பாடம் சார்ந்த செயல் திட்டத்தை தாண்டி மாணவர்களின் மாணவர்களுக்குள் இருக்கும் திறமைகளை அடையாளம் கண்டு வெளியே கொண்டு வர வேண்டும். மாணவர்களின் தனிநபர் வளர்ச்சிக்கான வழிகாட்டிகயாகவும் நீங்கள் இருக்க வேண்டும்.

மாணவர்களை ஊக்கப்படுத்தி அவர்களுக்குள் புதுமையான சிந்தனையை ஏற்படுத்த வேண்டும். அவர்களை கட்டுப்படுத்துவதற்கு பதிலாக அவருடைய ஆர்வத்தை புரிந்து கொண்டு உதவ வேண்டும் பாடப் புத்தகங்களை கடந்த உலகளாவிய அறிவைத் தேடுவதற்கு ஊக்கப்படுத்த வேண்டும்.

மாணவர்களே, கல்வி என்பது உங்களுக்கு கிடைத்த மிகப்பெரிய வாய்ப்பு. முன்பெல்லாம் இந்த நாட்டில் எத்தனையோ ஆயிரம் குழந்தைகளுக்கு இந்த கல்வி வாய்க்காமல் இருந்தது. ஆனால் இன்று அனைவரும் கல்வி கற்பதற்கான வாய்ப்பு 100 % உருவாக்கப்பட்டு இருக்கிறது. உங்களுக்கு கிடைத்த இந்த மிகப்பெரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள். அது உங்கள் கையில் தான் இருக்கிறது.

தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் முயற்சியில் தோல்வி ஏற்படும் போது அதைக் கண்டு கலங்கக் கூடாது. அது தோல்வி அல்ல- அனுபவம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். உங்களுடைய அடுத்த வெற்றிக்கு அது ஒரு

படிக் கல்லாக அமைய வேண்டும் நாம் ஈடுபடும் காரியத்தில் வெற்றியோ, தோல்வியோ ஆனால் தொடர்ந்து முன்னேற வேண்டும்.

கல்வி என்பது நாம் தனிப்பட்ட முறையில் வளருவதற்கு என்று இல்லாமல் அது சமுதாயத்திற்கும் பயன்பட வேண்டும். நம்முடைய வளர்ச்சியும் முன்னேற்றமும் சமுதாயத்திற்கு உதவ வேண்டும்.

நீங்கள் ஒரு குறிக்கோளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் எந்த துறையில் பயணம் செய்ய விரும்புகிறீர்களோ அதற்கான முயற்சியை தொடர்ந்து செய்யுங்கள். அது சார்ந்த அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்.

நாளைய இந்தியா உங்கள் கையில் தான் இருக்கிறது. டாக்டர் அப்துல் கலாம் சொன்னது போல, உயர்வை நோக்கி கனவு காணுங்கள். உங்கள் கனவுகள் நனவாக உழைப்பு, பகுத்தறிவு, சிந்தனையோடு செயல்படுங்கள்.

மாணவர்கள் அனைவருக்கும் ஒளிமயமான எதிர்காலம் அமைய என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.